**செ.வெ.எண்.103** **நாள்.20.02.2018.**

திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தில் மார்ச்/ஏப்ரல்2018 மேல்நிலை இரண்டாமாண்டு, முதலாமாண்டு மற்றும் எஸ்.எஸ்.எல்.சி அரசுப் பொதுத் தேர்வுகள் கீழ்க்கண்ட அட்டவணையின்படி நடைபெறவுள்ளது.

| வகுப்பு | தேர்வு தொடங்கும் நாள் | தேர்வு முடிவு பெறும் நாள் |
|---|---|---|
| மேல்நிலை – இரண்டாமாண்டு | 01.03.2018 | 06.04.2018 |
| மேல்நிலை – முதலாமாண்டு | 07.03.2018 | 16.04.2018 |
| எஸ்.எஸ்.எல்.சி | 16.03.2018 | 20.04.2018 |

நடைபெறவுள்ள தேர்வுகள் நல்லமுறையில் நடந்தேறவும் ஒழுங்கீனச் செயல்பாடுகளை தவிர்க்கும் பொருட்டும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு தேர்வு நாட்களில் குழு உறுப்பினர்கள் தேர்வு மையங்களை பார்வையிடவும் தேர்வுகள் எவ்வித புகாருக்கும் இடமின்றி நடைபெறவும் கருத்துருக்களை பரிமாறிக் கொள்ளவும், ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

மார்ச்/ஏப்ரல் 2018 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் 3 கல்வி மாவட்டங்களில் 123 தேர்வு மையங்களில் நடைபெற உள்ளது. மேல்நிலை 11ம் வகுப்பு பொதுத்தேர்வை 17374 மாணவர்களும், 22085 மாணவிகளும் மொத்தம் 39459 மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுதுகின்றனர். 12ம் வகுப்பில் 16366 மாணவர்களும், 21597 மாணவிகளும் மொத்தம் 37963 மாணவ / மாணவியர்கள் தேர்வு எழுதுகின்றனர். இதில் +1 வகுப்பில் 145 மாற்று திறனாளிகளும், +2 வகுப்பில் 124 மாற்று திறனாளிகளும் தேர்வு எழுத உள்ளனர்.

எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வு 3 கல்வி மாவட்டங்களில் 164 தேர்வு மையங்களில் 21,832 மாணவர்களும், 22,151 மாணவிகளும் மொத்தம் 43,983 மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். பாளையங்கோட்டை மத்திய சிறை தேர்வு மையத்தில் 36 நபர்கள் தேர்வு எழுதவுள்ளனர்.

**HIGHER SECONDARY PUBLIC EXAMINATION MARCH/APRIL 2018**
**Exam days: 07.03.2018 to 16.04.2018 (11 days)**

| SL.No | EDN. DIST. NAME | NO. OF CENTRES | NO.OF CUSTODIANS | NO.OF SCHOOLS | NO. OF ROUTES | NO. OF STUDENTS APPEARING EXAM | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | BOYS | GIRLS | TOTAL |
| 1 | 04. CHERANMAHADEVI | 42 | 4 | 108 | 10 | 5118 | 6766 | 11884 |
| 2 | 05. TENKASI | 39 | 3 | 108 | 8 | 5876 | 7257 | 13133 |
| 3 | 06. TIRUNELVELI | 42 | 3 | 99 | 7 | 6380 | 8062 | 14442 |
| | **TOTAL** | **123** | **10** | **315** | **25** | **17374** | **22085** | **39459** |

## HSE SECOND YEAR 2018 TIRUNELVELI DISTRICT
## Exam days: 01.03.2018 to 06.04.2018 (11 days)

| SL.No | EDN. DIST. NAME | NO. OF CENTRES | NO.OF CUSTODIANS | NO.OF SCHOOLS | NO. OF ROUTES | NO. OF STUDENTS APPEARING EXAM | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | BOYS | GIRLS | TOTAL |
| 1 | 04. CHERANMAHADEVI | 42 | 4 | 108 | 10 | 4828 | 6690 | 11518 |
| 2 | 05. TENKASI | 39 | 3 | 108 | 8 | 5397 | 7124 | 12521 |
| 3 | 06. TIRUNELVELI | 42 | 3 | 99 | 7 | 6141 | 7783 | 13924 |
| | **TOTAL** | **123** | **10** | **315** | **25** | **16366** | **21597** | **37963** |

## SSLC PUBLIC EXAMINATION MARCH/APRIL 2018

## SSLC 2018 - TIRUNELVELI DISTRICT
## Exam days: 16.03.2018 to 20.04.2018 (8 days)

| SL. No | EDN. DIST. NAME | NO. OF CENTRES | NO.OF CUSTODIANS | NO.OF SCHOOLS | NO. OF ROUTES | NO. OF STUDENTS APPEARING EXAM | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | BOYS | GIRLS | TOTAL |
| 1 | 04. CHERANMAHADEVI | 60 | 4 | 168 | 12 | 7087 | 7141 | 14228 |
| 2 | 05. TENKASI | 53 | 3 | 158 | 10 | 7113 | 7326 | 14439 |
| 3 | 06. TIRUNELVELI | 51 | 3 | 156 | 10 | 7632 | 7684 | 15316 |
| | **TOTAL** | **164** | **10** | **482** | **32** | **21832** | **22151** | **43983** |

**நிலையான படை (Standing Squad) மற்றும் பறக்கும்படை (Flying Squads)**

ஒவ்வொரு தேர்வு மையத்திலும் பத்து தேர்வறைக்கு ஒரு ஆசிரியர் நிலையான படை (Standing Squad) உறுப்பினராக செயல்பட நியமனம் செய்ய மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சேரன்மகாதேவி, தென்காசி, திருநெல்வேலி கல்வி மாவட்டங்களில் முறையே பறக்கும்படை குழுக்கள் மூன்று பள்ளிகளுக்கு ஒரு குழு என்ற முறையில் ஒவ்வொரு குழுக்களிலும் மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுக்கள் தேர்வு நாளில் பார்வையிட வேண்டிய மையங்களை அந்தந்த மாவட்ட கல்வி அலுவலர்கள் நிர்ணயிப்பார்கள். ஒரே தேர்வு மையத்தில் பல குழுக்கள் பார்வையிடுதல் இல்லாமல் அனைத்து தேர்வு மையங்களையும் பறக்கும் படையினர் பார்வையிட்டு ஒழுங்கீனச் செயல்கள் நடைபெறா வண்ணம் தேர்வுகள் திறம்பட நடைபெறுவது உறுதி செய்யப்படும். பறக்கும் படையினர் பார்வையிடும்போது தேர்வர்களுக்கு எவ்வித இடையூறுமில்லாமல் அமைதியான முறையில் தேர்வு எழுத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிமுக்கியமாக கண்காணிக்கப்படும் தேர்வு மையங்களுக்கு (Vulnerable Centres) மையத்திலேயே இருந்து செயல்படும் (Standing squad) நிலையான படை அமைக்கப்பட்டுள்ளது.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.